**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**DVC. No. 19-2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரியங்கா | Date | : | 14.10.2025 |
| Husband Name | : | பிரவின் | | : | |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

1. நான் M.sc., B.Ed படிப்பை TBML கல்லூாரியில் படித்துள்ளேன். என்னுடன் உடன்பிறந்தவர்கள் இரண்டு தம்பிகள் மற்றும் ஒரு தங்கை ஆவார்கள். அவர்கள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டதா என்றால் இல்லை. நானும் எதிர்மனுதாரர்களும் உறவினர்களா என்றால் இல்லை. பெரியோர்களால் பார்த்து நிச்சயம் செய்யப்பட்ட திருமணம் என்றால் சரிதான். எனக்கு திருமணத்தின் போது எனது பெற்றோர் 8 பவுன் நகைகளும், 1ம் எதிர் மனுதாரருக்கு 2 ½ பவுன் நகைகளும், ரூ. 3 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும், கார் வாங்குவதற்கு ரூ. 80,000/-ம் கொடுத்தார்கள். எனது தம்பியை அழைத்து சென்று காரை வாங்கினோம். அந்த காரின் விலை ரூ. 7,50,000/- ஆகும். கார் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் கார் எனது பெயரில் புக் செய்யப்பட்டு பின்னர் எனது நாத்தனார் பிரியதர்ஷினி பெயரில் மாற்றப்பட்டது.

2. எனது பெற்றோர் கார் வாங்குவதற்காக ரூ.70,000/- தான் கொடுத்தார்கள் என்றாலும், 1ம் எதிர் மனுதாரர் ரூ. 10,000/- கொடுத்தார் என்றாலும் சரியல்ல. காரை புக் பன்னும் போது எவ்வளவு தொகை முதலில் செலுத்தப்பட்டது என்றால் ரூ.50,000/- ஆகும். காரை வாங்கும்போது ஆரம்ப தொகையாக நாங்கள் ரூ.80,000/-யும் எதிர் மனுதாரர்கள் ரூ. 80,000/- யும் மொத்தம் ரூ. 1,60,000/-ஐ செலுத்தினோம் என்றால் சரியல்ல. காருக்கு மாத மாதம் எவ்வளவு தவனை தொகை செலுத்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. காரை எதிர் மனுதாரர்கள் வாங்கியதால் தான் அதற்கு செலுத்தப்பட்ட தொகைகள் குறித்து எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. எனக்கு திருமணத்தின் போது எவ்வளவு நகைகள் செய்தார்கள் என்று எதிர் மனுதாரர்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது திருமணத்தின் போது வீடியோ மற்றும் போட்டோ எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். அந்த வீடியோவை பார்த்தால் எனக்கு எவ்வளவு நகை போட்டார்கள் என்று தெரியவரும் என்றால் சரியல்ல. மேற்படி எனது பெற்றோர் எனக்கு செய்த நகைகளுக்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. எனது பெற்றோர் எனக்கு செய்த நகைகளை அணிந்துகொண்டு நான் எடுத்த புகைபடங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும்.

3. திருமணம் முடிந்து இல்லற வாழ்க்கையை எங்கு முதலில் தொடங்கினோம் என்றால் எனது பெற்றோர் வீட்டில் தொடங்கினோம். 3 நாட்கள் கழித்து எதிர் மனுதாரர்களின் வீட்டிற்கு சென்றோம். எதிர் மனுதார்கள் வீட்டில் 5 நாட்கள் தங்கினேன். திருமணத்தன்றே எதிர் மனுதாரர்கள் எனது நகைகள் மற்றும் கட்டப்பட்ட தங்க காசுகள் அனைத்தையும் வாங்கிகொண்டும் வாடகை நகையையும் வாங்கிகொண்டு புடவையுடன் மட்டும் தான் எனது பெற்றோர் வீட்டிற்கு வரவேற்பிற்கு அனுப்பி வைத்தார்கள். அவ்வாறு புடவையுடன் மட்டும் சென்றபோது எனது பெற்றோர் எதிர் மனுதாரர்களிடம் அதை பற்றி கேட்கவில்லையா என்றால் கேட்டார்கள். அதற்கு எதிர்மனுதாரர்கள் அன்று ஞாயிற்று கிழமை என்பதாலும், நான் அவர்களது வீட்டு பெண் ஆகிவிட்டபடியாலும் நகைகளை கழற்றி கொண்டதாக காரணம் கூறினார்கள். ஆனால், உண்மையான காரணம் அவர்கள் எனது நகைகளை பறித்து கொண்டு என்னை வீட்டை விட்டு துர்த்தி விடுவதற்காக தான். எனது வீட்டில் வரவேற்பின் போது போட்டோ வீடியோ எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். அந்த வீடியோவை பார்த்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். அந்த வீடியோவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எதிர் மனுதாரர் வீட்டில் நான் தங்கியிருந்த சமயத்தில் அவர்கள் என்னை நல்லமுறையில் தான்

கவனித்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

4. திருமணத்தின் போது இருவீட்டார் செய்த சீர்வரிசை பொருட்களின் பட்டியலை தயார் செய்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் சரிபார்த்து கொடுப்பது வழக்கம் என்றால் எனக்கு பெற்றோர் செய்த சீர்வரிசை பொருட்களை மட்டுமே சரிபார்த்து கொடுத்தார்கள். நகைகளை சரிபார்த்து கொடுக்கவில்லை. நான் சொல்வது போல் திருமணத்தின் போது எந்த நகைகளும் எனக்கு செய்யவில்லை என்பதால் தான் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் நகைகளை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எதிர் மனுதாரர்களின் குடும்பத்தினருடன் கலக்க வேண்டும் என்பதற்காக என்னை எதிர் மனுதாரர்கள் எவ்வித வேலையும் செய்யவிடாமல் நல்ல முறையில் கவனித்து கொண்டார்கள் என்றால் சரியல்ல.

5. கடந்த 15.07.2024 அன்று ஆடி மாத சடங்கிற்காக என்னை எனது பெற்றோர் அழைத்து சென்றார்கள். நான் ஆடி வழிக்கு செல்லும் போது நான் சந்தோஷமாக தான் எதிர் மனுதாரர் வீட்டில் இருந்து சென்றேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் எனது வீட்டிற்கு வந்து 3 நாட்கள் தங்கியிருந்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதார்கள் என்னை துன்புறுத்தியது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கடந்த 21.10.2024 அன்று சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரின் பேரில் இருதரப்பையும் அழைதது காவல் துறையினர் விசாரணை செய்தார்கள். எதிர் மனுதாரர்கள் ஒத்து வராமல் நீதிமன்றத்தின் மூலம் பார்த்துக்கொள்வதாக எதிர்மனுதாரர்கள் கூறிவிட்டார்கள். ஆடி வழி முடிந்து எனது கணவரின் குடும்பத்தார் என்னை அழைக்க வந்தார்களா என்றால் இல்லை.

6. எதிர்மனுதாரர்கள் என்னை அழைக்க வந்தபோது நான் அவருடன் செல்ல மறுத்ததால் 1ம் எதிர் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என கோரி மயிலாடுதுறை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி புகாரின் பேரில் மயிலாடுதுறை போலிசார் இருதரப்பிரையும் அழைத்து பேசினார்கள் என்றால் சரியல்ல. அப்போதும் நான்

மயிலாடுதுறை போலிசாரிடம் எனது நகைகளை பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் ஆடி வழிக்கு சென்றபோது எனது நகைகளை நான் போட்டுகொண்டு சென்றதால் தான் நகைகளை பற்றி போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என கோரி சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் நீதிமன்றத்தில் மூலம் சமரசம் பேசினார்களா என்றால் பேசினார்கள். ஆனால், அவர்கள் என்னை கொடுமை செய்துள்ளதால் எனக்கு அவர்களுடன் வாழ விருப்பம் இல்லை என கூறிவிட்டேன்.

7. திருமணம் ஆன 5 நாட்களிலேயே எனது கணவருடன் வாழ நான் தான் விருப்பம் இல்லை என சொல்கிறேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் பெற்றோர், ஊர் பஞ்சாயத்தார்கள் என்னை 1ம் எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழ சொல்லி சமாதானம் பேசினார்களா என்றால் இல்லை. நான் எனது மனுவில் 1ம் மனுதாரரை பற்றி கூறியுள்ளது அனைத்தும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லப்பட்டது என்றால் சரியல்ல. எதிர்மனுதார்களுக்கு வீடு, நிலம் ஆகியவைகள் கொண்ட அந்தஸ்து மிக்க மரியாதையான குடும்பம் என்றால் வீடு, நிலம் மட்டும் உள்ளது. மற்றவை பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள மசாஆ4 உள்ள ஆவணங்களில் 11.09.2019 மற்றும் 27.11.2022 ஆகியவை Estimation Slip என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

8. நான் ஆடி வழிக்கு சந்தோஷமாக சென்றதால் தான் நான் எதிர் மனுதாரர்களுக்கு எதிராக உடனடியாக எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நகையை தவிர்த்து நான் எடுத்து வந்த சீர்வரிசை பொருட்கள் அனைத்தையும் எதிர்மனுதாரர்கள் என்னிடம் ஒப்படைக்க தயாராக உள்ளார்கள் என்றால் எனது நகைகள் மற்றும் காருக்காக கொடுத்த பணத்தையும் சேர்த்து கொடுத்தால் தான் நான் பெற்றுகொள்ள தயாராக உள்ளேன். எனக்கும் எனது

பெற்றோர்களுக்கு மட்டுமே தெரிந்த காரணத்தினார் தான் நான் 1ம் எதிர் மனுதாரருடன் வாழ விரும்பவில்லை என கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர்கள் என்னை தாக்கியதற்கான நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துகொண்டேனா என்றால் இல்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து ஆவணங்கள் மூலம் நிரூபிக்க முடியுமா என்றால் முடியாது. நான் சொல்வது போல் என்னை யாரும் தாக்கவில்லை என்றாலும், கொடுமைபடுத்தவில்லை என்றாலும் ,எதிர்மனுதார்கள் என்னை தாக்கி கொடுமைபடுத்தியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுவில் சொல்லியுள்ளது போல சமூக வளைதளங்களில் எனது புகைப்படத்தை தவறாக சித்தரித்து 1ம் எதிர் மனுதாரர் வெளியிட்டதாக சொல்லியுள்ளதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், அவ்வாறு நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

9. 1ம் எதிர் மனுதாரரை திருமணம் செய்து கொண்டு 1 வார காலத்திலேயே அவருடன் நான் வாழ மறுத்ததால் நான் தான் 1ம் எதிர் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. யாருடைய துர்போதனைகளை கேட்டுக்கொண்டு தான் எதிர் மனுதாரர்களை அவமானபடுத்துகிறேன் என்றால் சரியல்ல. தற்போது 1ம் எதிர்மனுதாரர் என்ன வேலை பார்க்கிறார் என்று தெரியுமா என்றால் அவரை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் மனுவில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், தங்க நகைகளை எடுத்து சென்றுவிட்டு எதிர் மனுதாரர்களை பழிவாங்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தான் 1ம் எதிர் மனுதாரருடன் வேண்டும் என்றே வாழ மறுத்து அவரது வாழ்க்கையை பாழாக்கிவிட்டேன் என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகளை கோரி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் நான் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல.